**PRESS NOTE**

**Dated: 11.07.2023**

A case in Thiruvarur, Vigilance & Anti-Corruption Cr.No.04/2022 was registered on 07.07.2022 **against Tr. R. Kamaraj M.L.A., formerly Minister for Food and Civil Supplies and 5 others**, into the allegation of acquisition of assets and pecuniary resources to the tune of Rs. 58,44,32,252/- , which are disproportionate to the known sources of income and in this regard, a deeper probe was taken up. During the course of investigation, searches were conducted in 51 places by the DVAC and certain incriminating materials/ documents were also seized.

The investigation disclosed that, Tr. R. Kamaraj had acquired **shares in M/S NARC Hotels Private Limited and also purchased assets in the name of NARC Hotel Pvt.Ltd**. through his close associates Tr.R.Chandrakasan, Tr.B.Krishnamoorthy, Tr.R.Udhayakumar and also constructed a **Multi-Speciality Hospital in the name of Sri Kamatchi Medical Centre a unit of Sri Vasudevaperumal Health Care Private Limited** for his two sons Dr.M.K.Eniyan and Dr.K.Inban, all to the extent of **Rs.127,49,09.085/- which are disproportionate to the known sources of income** for which they could not account satisfactorily.

After completion of the investigation, necessary sanction for prosecution has been obtained from the Hon'ble Speaker of Tamil Nadu legislative assembly and the charge sheet was filed today before the Hon'ble court of Special Judge/CJM, Thiruvarur against **Tr. R. Kamaraj and his sons Dr. M.K. Eniyan and K. Inban and his close associates Tr. R. Chandrakasan, Tr. B. Krishnamoorthy and Tr. S. Udayakumar** under relevant provision of the prevention of corruption Act 1988 as amended in 2018 and Indian Penal Code 1860.

# <u>பத்திரிக்கைசெய்தி</u>

**<u>நாள்:11.07.2023</u>**

தமிழ்நாடு முன்னாள் உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சரும், தற்போதைய திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான திரு.R.காமராஜ் அவர்கள், அவர் கடந்த 01.04.2015 முதல் 31.03.2021 வரை அமைச்சராக பதவி வகித்த காலத்தில் அவரது பெயரிலும், அவரது மகன்கள் திரு.இனியன், திரு.இன்பன் மற்றும் அவரது நண்பர்களான திரு.சந்திரகாசன், திரு.கிருஷ்ணமூர்த்தி, மற்றும் திரு.உதயகுமார் ஆகியோருடன் கூட்டுசேர்ந்து மொத்தம் ரூ.58,44,38,252/- அளவிற்கு வருமானத்திற்கு அதிகமாக முறைகேடாக சொத்து சேர்த்ததாக கடந்த 07.07.2022 அன்று திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 04/2022 ன்படி வழக்குபதிவு செய்யப்பட்டது. விசாரணையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அதிகாரிகளால் 51 இடங்களில் சோதனை நடத்தப்பட்டு வழக்குடன் தொடர்புடைய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.

திரு.R.காமராஜ் அவர்கள், அவர் அமைச்சராக இருந்த காலகட்டத்தில் அவரது நெருங்கிய கூட்டாளிகளான திரு.சந்திரகாசன், திரு.கிருஷ்ணமூர்த்தி, மற்றும் திரு.உதயகுமார் ஆகியோரின் உடந்தையுடன் **தஞ்சாவூரில் M/S NARC Hotel Private Limited** என்ற நிறுவனத்தின் பெயரில் சொத்துகளை வாங்கி அந்த நிறுவனத்திற்கு சொந்தமான இடத்தில் அவரது மகன்களான திரு.இனியன் மற்றும் திரு.இன்பன் ஆகியோரின் பெயர்களில் **தஞ்சாவூரில் ஸ்ரீகாமாட்சி மெடிக்கல் சென்டர் (ஸ்ரீவாசுதேவபெருமாள் ஹெல்த் கேர் லிமிடெட்) என்ற பெயரில் ஓர் நவீன பன்னோக்கு மருத்துவமனையை கட்டியும்**, இதர வகைகளிலும் **ரூ.127,49,09,085/-** அளவிற்கு **தனது வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளார்.**

மேற்படி வழக்கின் புலன் விசாரணை முடிக்கப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு தொடர மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைதலைவர் அவர்களிடம் இசைவாணை பெற்றும், இன்று **திருவாரூர் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்/சிறப்பு நீதிபதி நீதிமன்றத்தில் திரு.R.காமராஜ், அவரது மகன்கள் திரு.இனியன், திரு.இன்பன் மற்றும் அவரது நெருங்கிய கூட்டாளிகளான திரு.சந்திரகாசன், திரு.கிருஷ்ணமூர்த்தி, திரு.உதயகுமார்** ஆகியோர் மீது ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் திருத்தப்பட்டஊழல் தடுப்பு சட்டம் 2018 மற்றும் இந்திய தண்டனை சட்டத்தின் படி உரிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.